# தேசிய கால்நடைகள் பற்றிய கொள்கை

# இலங்கை

வளமான தேசத்திற்கும் மற்றும் நல்வாழ்வுக்குமான கால்நடை அபிவிருத்தி

**கால்நடைகள் பிரிவு**

**கமத்தொழில், கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு**

**அறிமுகம்**

இலங்கையின் கால்நடை வளர்ப்பு உப பிரிவு, உணவு பாதுகாப்பு, ஊட்டச்சத்து, கிராமிய வாழ்வாதாரங்கள் மற்றும் விவசாய பொருளாதாரத்திற்கு பெறுமதி சேர்த்தல் என்பவற்றில் இன்றியமையாத ஒரு பங்கை வகிக்கின்றது. தேசிய கால்நடை அபிவிருத்தி கொள்கையானது, பால் உற்பத்தியில் தன்னிறைவு அடைதல், கால்நடைகளின் மரபியலை மேம்படுத்துதல், உற்பத்தி உள்கட்டமைப்பை வலுப்படுத்துதல், தனியார் துறை பங்கேற்பை ஊக்குவித்தல் மற்றும் கால்நடைகளின் விரிவாக்கல் சேவைகளை சீரமைத்தல் என்பவற்றில் கவனத்தை செலுத்தியது. எனினும், கடந்த இரண்டு தசாப்தங்களாக, காலநிலை மாற்றத்தின் தாக்கங்கள், சந்தை நிலையற்ற தன்மை, தீவன பற்றாக்குறை, புதிதாக உருவாகும் விலங்குவழி நோய்கள் மற்றும் மாறிவரும் வர்த்தக இயக்கவியல் என்பன அடங்கலாக குறிப்பிடத்தக்க கட்டமைப்பு மற்றும் சூழல் சார்ந்த மாற்றங்கள், புதியவொரு கொள்கை கட்டமைப்பை தேவைப்படுத்தும் புதிய சவால்களை தோற்றுவித்துள்ளன.

இலங்கையின் கால்நடைகள் பிரிவின் நிலையான வளர்ச்சியையும் மீள்திறனையும் உறுதி செய்வதற்காக நீக்க வேண்டிய பல முக்கிய இடைவெளிகளை 2006 ஆம் ஆண்டின் கொள்கை மீளாய்வு அடையாளம் கண்டுள்ளது. கால்நடை உற்பத்தி முறைமைகளில், குறிப்பாக தீவன பாதுகாப்பு, வெப்ப அழுத்த முகாமை, நீர் இருப்பு மற்றும் பேரிடர் தயார்நிலை என்பவற்றில் காணப்படும் வரையறுக்கப்பட்ட காலநிலை மீள்திறன் இதில் அடங்கும். மேலும், கால்நடை அபிவிருத்தியை 'ஒரே சுகாதாரம்' (One Health) அணுகுமுறைகள் மற்றும் உயிரியல் பாதுகாப்பு கட்டமைப்புகள் என்பவற்றுடன் ஒருங்கிணைப்பதில் உள்ள பலவீனம், வளர்ச்சியடையாத கால்நடை பெறுமானசங்கிலிகள் மற்றும் போதுமானதாக இல்லாத தடமறியும் முறைமைகள் என்பனவும் காணப்படுகின்றன.

நவீன தொழில்நுட்பங்களின் குறைந்த பயன்பாடு, வரையறுக்கப்பட்ட டிஜிட்டல்மயமாக்கல் மற்றும் புத்தாக்கம், மற்றும் சிறு விவசாயிகளை முறைசார் சந்தைகளில் போதுமான அளவு ஒருங்கிணைக்காமை போன்ற சவால்களையும் இந்த பிரிவு எதிர்கொள்கின்றது. போதுமான தரமற்ற கால்நடை தீவனம் மற்றும் தீவன மூலப்பொருட்கள், மரபணு மற்றும் இனப்பெருக்க பொருட்கள் கிடைக்காமை, தனியார் துறை முதலீட்டின் பற்றாக்குறை, மற்றும் சாதகமான வணிக சூழல் முதலிய தடைகள் இந்த பிரிவின் வளர்ச்சியை மேலும் தடுக்கின்றன. மேலும், தற்போதைய கொள்கை கட்டமைப்பு, ஐக்கிய நாடுகளின் நிலையான அபிவிருத்தி இலக்குகள்,

மாறிவருகின்ற உலகளாவிய வர்த்தக தேவைகள், நிலைத்தன்மை நியமங்கள் என்பவற்றுடன் குறைந்த அளவிலேயே ஒத்துப்போகின்றது.

இந்த இடைவெளிகளை நீக்குவதற்காக, இந்த பிரிவில் முக்கிய அக்கறையுடைய தரப்புகளின் தீவிர பங்கேற்புடன், அமைச்சு தேசிய பால் உற்பத்தி அபிவிருத்தி கொள்கையையும் மற்றும் தேசிய கோழிவளர்ப்பு அபிவிருத்தி கொள்கையையும் தயாரித்துள்ளது. இற்றைப்படுத்திய தேசிய கால்நடைகள் அபிவிருத்தி கொள்கை, அனைத்து கால்நடை உப பிரிவுகளையும் ஒரே, விரிவான கொள்கை கட்டமைப்பில் ஒருங்கிணைப்பதை நோக்கமாகக்கொண்டுள்ளது.

இந்தக் கொள்கையானது, கால்நடை உற்பத்தியை மேம்படுத்தும் நோக்கத்துடன் தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் தற்போதுள்ள மற்றும் புதிதாக உருவாகிவரும் துறைசார் சவால்களை எதிர்கொள்வதற்கான இலக்குகள், கொள்கை நோக்கங்கள் மற்றும் கொள்கை உத்திகள் ஆகியவற்றை விவரிக்கின்றது. கொள்கை நோக்கங்களுடன் ஒத்துப்போகும் பத்து கொள்கை முன்னுரிமைத் தூண்கள், கால்நடைத் துறையை அதன் கொள்கை இலக்குகளை அடைந்து கொள்ளும் வழியில் வழிநடத்துகின்றன.

**கொள்கையின் நோக்கெல்லையும் மற்றும் ஏற்புடைய தன்மையும்**

இந்த கொள்கையானது இலங்கையில் கால்நடை பிரிவின் நிலையான அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம் ஆகியவற்றுக்கான ஒரு தேசிய கட்டமைப்பை வழங்குகின்றது. இது நாடு முழுவதும் கால்நடை உற்பத்தி, பதப்படுத்துதல், சந்தைப்படுத்துதல், ஆராய்ச்சி மற்றும் சேவை வழங்கலில் என்பவற்றில் ஈடுபட்டுள்ள எல்லா அக்கறையுடைய தரப்புகளுக்கும் பொருந்தும். இக்கொள்கையானது அரசாங்க அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்கள், மாகாண மற்றும் உள்ளூராட்சி அமைப்புகள், தனியார் துறை அமைப்புகள், விவசாய அமைப்புகள், ஆராய்ச்சி மற்றும் கல்வி நிறுவனங்கள், அபிவிருத்தி பங்காளர்கள் மற்றும் தனிப்பட்ட கால்நடை உற்பத்தியாளர்கள் முதலிய தரப்புகளுக்கும் ஏற்புடையதாகும்.

இந்த கொள்கையின் நோக்கெல்லை, உணவு உற்பத்திக்கும் கிராமிய வாழ்வாதாரங்களுக்கும் பங்களிக்கும் மாடுகள், எருமைகள், கோழிகள், வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் மற்றும் பிற வளர்ப்பு விலங்குகள் என்பன அடங்கலாக எல்லா முக்கிய கால்நடை உப பிரிவுகளையும் உள்ளடக்கியுள்ளது. இது தனியார் துறை தலைமையிலான வளர்ச்சி, சந்தை சார்ந்த மற்றும் போட்டித்தன்மை வாய்ந்த உற்பத்தி, நிலையான மற்றும் சுற்றாடலுக்குரிய பொறுப்பான வளர்ச்சி, சிறு விவசாயிகள் மற்றும் கிராமிய வாழ்வாதாரத்திற்கான ஆதரவு, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த வளர்ச்சி போன்றவற்றை கையாள்கின்றது.

**தூரநோக்கு:**

தேசிய மறுமலர்ச்சிக்கான நவீனமயமாக்கப்பட்ட மற்றும் நிலையான கால்நடை பிரிவு

**செயற்பணி:**

கால்நடை தொழிலை வலுவானதாகவும், போட்டித்தன்மை வாய்ந்ததாகவும், நீடித்ததாகவும் மாற்றுவதற்கும், எல்லா நுகர்வோர் குழுக்களுக்கும் பாதுகாப்பான மற்றும் சத்தான கால்நடை பொருட்களை மலிவு விலையில் வழங்குவதற்கும், சர்வதேச தேவையை பூர்த்தி செய்வதற்கும், அதே வேளையில் தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிப்பதற்கும், கிடைக்கக்கூடிய அனைத்து வளங்களையும் தொழில்நுட்ப ரீதியில் சிறந்ததாகவும் மற்றும் சமூக-பொருளாதார ரீதியில் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவும் சுற்றடாலுக்கு உகந்த முறையில் நிர்வகிக்க்கூடியதாகாவும் உகந்த முறையில் பயன்படுத்துதல்.

**இலக்குகள்:**

01. மேம்பட்ட உற்பத்தித்திறன், தீவன வளங்கள் மற்றும் வலுப்படுத்தப்பட்ட பெறுமான சங்கிலிகள் என்பவற்றின் மூலம் தொடர்ச்சியான தேசிய விநியோகத்தை உறுதிசெய்ய, பால், இறைச்சி மற்றும் முட்டைகள் என்பவற்றின் உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்க செய்தல்.

02. பண்ணை முதல் நுகர்வோர் வரையிலான பெறுமான சங்கிலி மற்றும் சான்றிதழ் முறைமைகள் என்பவற்றை வலுப்படுத்துவதன் மூலம், பாதுகாப்பான உயர்தரமான கால்நடை உற்பத்திகளை உறுதிசெய்தல்.

03. செலவுத்திறனுள்ள உற்பத்தி முறைகளின் மூலம் விவசாயிகளின் இலாபத்தை மேம்படுத்தும் அதே வேளையில், நுகர்வோருக்கு கட்டுப்படியாகும் விலைகளையும் உறுதிசெய்தல்.

04. பழங்குடி மரபணு வளங்களை பாதுகாத்தல், மேம்படுத்துதல் மற்றும் நீடித்த முறையில் பயன்படுத்துதல்.

05. சுழற்சி பொருளாதார அணுகுமுறை மற்றும் நிலம், நீர், தீவனம் என்பன உள்ளிட்ட வளங்களை திறமையாக பயன்படுத்துவதன் மூலம், சுற்றாடலுக்கு உகந்த மற்றும் காலநிலை மாற்றங்களுக்கு ஈடுகொடுக்கக்கூடிய கால்நடை வளர்ப்பு முறைகளை மேம்படுத்துங்கள்.

06. பிரிவு சார்ந்த வளர்ச்சி மற்றும் போட்டித்தன்மை ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக, கால்நடை உற்பத்தி, பதப்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்தல் ஆகிய பிரிவுகளில் பொது-தனியார் கூட்டாண்மைகளை ஊக்குவித்து, முதலீட்டை அதிகரித்தல்.

07. சர்வதேச நியமங்கள் மற்றும் சான்றளித்தல் ஆகியவற்றை அனுசரிப்பதை மேம்படுத்துவதன் மூலம், போட்டித்தன்மைமிக்க ஏற்றுமதி சந்தையை எட்டுவதற்காக, ஏற்றுமதியை இலக்காகக்கொண்ட கால்நடை உற்பத்திற்கு வசதியளித்தல்.

**குறிக்கோள்கள்:**

1. உற்பத்தித்திறனையும் இலாபகரமான விவசாயத்தையும் மேம்படுத்துவதன் மூலம், நாடு முழுவதும் விலங்குகளிடமிருந்து கிடைக்கும் உணவுக்கான அணுகுதன்மையை அதிகரித்தல்.

2. நாட்டில் ஆரோக்கியமான கால்நடை இனத்தை உறுதிசெய்ய, கால்நடை சுகாதார முகாமைத்துவ முறைமைகளை மேம்படுத்துதல்.

3. நிலையான தீவன வளங்களை உருவாக்குதல், தீவனத்தின் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் திறமையான தீவனமளிக்கும் நடைமுறைகளை ஊக்குவித்தல் ஆகியவற்றின் மூலம் தீவனம் மற்றும் ஊட்டச்சத்து முகாமைத்துவத்தை மேம்படுத்துதல்.

4. உள்நாட்டு மற்றும் மேம்படுத்தப்பட்ட கால்நடை இனங்களின் மரபணு மேம்பாடு, பாதுகாப்பு மற்றும் நீடித்த பயன்பாடு என்பவற்றுக்காக, முறையான இனப்பெருக்க நிகழ்ச்சித்திட்டங்களை ஊக்குவித்தல்.

5. இலாபகரமான நவீன கால்நடை தொழிலை உறுதிசெய்வதற்காக, புதுமையான மற்றும் மேம்பட்ட தொழில்நுட்பங்களின் மூலம் பெறுமதி சேர்த்தலை மேம்படுத்துதல்.

6. கால்நடை பிரிவு முழுவதும் தகவலறிந்த முடிவெடுப்பதற்காக, நிகழ்நேர தரவுகள் சேகரிப்பு, பகுப்பாய்வு மற்றும் பகிர்வை எளிதாக்கும் வகையில், ஒருங்கிணைந்த தகவல்தொடர்பு தொழில்நுட்ப அடிப்படையிலான கால்நடை தரவு முகாமைத்துவ முறைமைகளை உருவாக்கி நடைமுறைப்படுத்துதல்.

7. வாழ்வாதார அபிவிருத்தி மற்றும் தொழில்துறை நிலைத்தன்மை என்பவற்றுக்கு ஆதரவளிக்கும் வகையில், கால்நடை உற்பத்தியில் ஈடுபடுவதற்கு பெண்களையும் இளைஞர்களையும் ஊக்குவித்தல்.

8. உள்ளூர் மற்றும் சர்வதேச சந்தைகளில் நுகர்வோர் நம்பிக்கை, தயாரிப்பு அங்கீகாரம் மற்றும் போட்டித்திறனை மேம்படுத்தல் என்பவற்றின் நிமித்தம், வலுவான தயாரிப்பு அடையாள மூலோபாயங்களை உருவாக்கி, சந்தை அணுகலை செம்மைப்படுத்துதல்.

9. சுழற்சி பொருளாதார அணுகுமுறையின் மூலம் கால்நடை உற்பத்திகள் பயன்பாட்டை மேம்படுத்துதல்.

10. நிலையான மற்றும் காலநிலை மாற்றங்களுக்கு ஈடுகொடுக்கக்கூடிய கால்நடை உற்பத்தியை உறுதிசெய்வதற்காக, பொது-தனியார் அக்கறையுடைய தரப்புகளுக்கும் மற்றும் நிறுவனங்களுக்கும் இடையேயான ஒத்துழைப்பின் மூலம் புதுமையான, சந்தை சார்ந்த ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியை ஊக்குவித்தல்.

11. கால்நடை பிரிவின் மாறிவரும் தேசிய தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில், மனித மற்றும் உள்கட்டமைப்பு திறன்களை வலுப்படுத்துதல்.

12. பாதுகாப்பான மற்றும் உயர்தரமான கால்நடை உற்பத்திகளின் தொடர்ச்சியான விநியோகத்தை பேணும் ஒரு நிர்வாக மற்றும் ஒழுங்குமுறை கட்டமைப்பை உறுதி செய்வதற்காக, நிறுவனங்களுக்கு இடையேயான ஒருங்கிணைப்பை மேம்படுத்துதல்.

**மூலோபாயங்கள்**

**குறிக்கோள் 1 - உற்பத்தித்திறனையும் இலாபகரமான விவசாயத்தையும் மேம்படுத்துவதன் மூலம், நாடு முழுவதும் விலங்குகளிடமிருந்து கிடைக்கும் உணவுக்கான அணுகுதன்மையை அதிகரித்தல்**

1.1. காலநிலை மீள்திறன் நடவடிக்கைகள் மூலம் போதுமான கால்நடை உற்பத்திக்கான தேவையை ஊக்குவித்தல்.
1.2. ஏற்றுமதி சார்ந்த உள்ளூர் உற்பத்தியை ஊக்குவித்தல்.
1.3. சாதகமான நிதி கொள்கையின் மூலம் ஆரோக்கியமான போட்டித்தன்மை மற்றும் நியாயமான வர்த்தகத்திற்கான உகந்த வணிக சூழலை உருவாக்குதல்.
1.4. பொது தனியார் பங்காளித்துவத்தை ஊக்குவித்தல்.
1.5. கால்நடை வளர்ப்பு நிறுவனங்களின் நிலையான அபிவிருத்திற்கு ஆதரவளிக்கும் வகையில், நிதி, தொழில்நுட்பம், விரிவாக்கம், உட்கட்டமைப்பு ஆகியவற்றுக்கான சமமான அணுகலை எளிதாக்குதல்.
1.6. கால்நடை காப்புறுதி திட்டத்தின் மேம்பாடு, நடைமுறைப்படுத்தல் ஆகியவற்றை ஊக்குவித்தல்.

**குறிக்கோள் 2 - நாட்டில் ஆரோக்கியமான கால்நடை இனத்தை உறுதிசெய்ய, கால்நடை சுகாதார முகாமைத்துவ முறைமைகளை மேம்படுத்துதல்**

2.1. தொற்று மற்றும் விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்கு பரவும் நோய்களின் பரவலை குறைக்க, நோய் கண்காணிப்பு, தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை வலுப்படுத்துதல்.
2.2. விலங்குகளின் ஆரோக்கியத்தை உறுதிப்படுத்துவதற்காக, தேசிய மற்றும் பிராந்திய மட்டங்களில் ஆய்வகம், நோய் நிர்ணயம், சிகிச்சைகள் மற்றும் மனித வளம் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.
2.3. பொது மற்றும் தனியார் அமைப்புகளுடன் இணைக்கும் நிகழ்நேர நோய் அறிக்கை முறையை நிறுவுதல்.
2.4. எல்லை கட்டுப்பாட்டுக்கான வசதிகளை மேம்படுத்துதல்.
2.5. ஒரே சுகாதார அணுகுமுறையின் கீழ் திறமையான கால்நடை பொது சுகாதார சேவையை செயற்படுத்துதல்.
2.6. நல்ல கால்நடை வளர்ப்பு முறைகளை ஊக்குவிப்பதற்கு, பண்ணை மதிப்பீட்டு வழிமுறைகளை அறிமுகப்படுத்துதல்.
2.7. நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகள் உள்ளிட்ட கால்நடை மருந்துகளை விவேகத்துடன் பயன்படுத்துவதை உறுதிசெய்தல்.

**குறிக்கோள் 3 - நிலையான தீவன வளங்களை உருவாக்குதல், தீவனத்தின் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் திறமையான தீவனமளிக்கும் நடைமுறைகளை ஊக்குவித்தல் ஆகியவற்றின் மூலம் தீவனம் மற்றும் ஊட்டச்சத்து முகாமைத்துவத்தை மேம்படுத்துதல்**

3.1. கால்நடை உற்பத்திக்கு தேவையான தரமான மற்றும் சத்தான கால்நடை தீவனம் மற்றும் தீவன மூலப்பொருட்கள் என்பன ஆண்டு முழுவதும் கிடைப்பதை உறுதி செய்தல்.
3.2. கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலம், தீவனம் மற்றும் செறிவூட்டப்பட்ட தீவன உற்பத்திக்கான மூலப்பொருட்களை உள்நாட்டில் உற்பத்தி செய்தல் என்பவற்றின் ஆய்வக வசதிகள் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.
3.3. கால்நடை தீவன உற்பத்திக்கு சாதகமான தொடர்புடைய கொள்கைகள் மற்றும் விதிமுறைகள் என்பவற்றுக்கு உதவுதல்.
3.4. விலங்குத் தீவனச் சான்றிதழின் தரத்தை உறுதிப்படுத்துவதற்காக, ஆய்வக வசதிகள் மற்றும் மனித வளம் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.
3.5. கால்நடை தீவன உற்பத்திக்கான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மேம்பட்ட தொழில்நுட்பம் ஆகியவற்றை மேம்படுத்துதல்.

**குறிக்கோள் 4 - உள்நாட்டு மற்றும் மேம்படுத்தப்பட்ட கால்நடை இனங்களின் மரபணு மேம்பாடு, பாதுகாப்பு மற்றும் நீடித்த பயன்பாடு என்பவற்றுக்காக, முறையான இனப்பெருக்க நிகழ்ச்சித்திட்டங்களை ஊக்குவித்தல்**

4.1. நாட்டிற்கு சாதகமான கால்நடை இனப்பெருக்க கொள்கையை வலுப்படுத்துதல்.
4.2. மரபியல் மேம்பாட்டின் மூலம் கால்நடை உற்பத்தித்திறனை அதிகரித்தல்.
4.3. பயனுள்ள தேசிய கால்நடை இனப்பெருக்கக் கருத்திட்டங்களுக்காக, மனித வளம் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துதல்.
4.4. மேம்படுத்தப்பட்ட உள்நாட்டு விலங்கு இனங்களை அவற்றின் இயற்கைச்சூழலுக்கு வெளியேயும் (Ex-situ) மற்றும் இயற்கைச்சூழலுக்கு உள்ளேயும் (In-situ) பாதுகாத்தல்.
4.5. இனப்பெருக்கக் கோளாறுகளை கையாள்வதற்கான வசதிகளை வலுப்படுத்துதல்.

**குறிக்கோள் 5 - இலாபகரமான நவீன கால்நடை தொழிலை உறுதிசெய்வதற்காக, புதுமையான மற்றும் மேம்பட்ட தொழில்நுட்பங்களின் மூலம் பெறுமதி சேர்த்தலை மேம்படுத்துதல்**

5.1. நவீன தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் பெறுமதி சேர்ந்த உற்பத்தியை ஊக்குவித்தல்.
5.2. தேசிய மற்றும் சர்வதேச தேவைகளுக்கேற்ப பாதுகாப்பான மற்றும் தரமான பெறுமதி சேர்ந்த உற்பத்தியை உறுதிசெய்தல்.
5.3. பெறுமதி சேர்க்கப்பட்ட தயாரிப்புகளின் தரம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றை உறுதி செய்வதற்காக சட்டங்களை வலுப்படுத்துதல்.
5.4. பெறுமதி சேர்க்கப்பட்ட தயாரிப்புச் செயற்பாடுகளில் தனியார் துறை பங்களிப்பை ஊக்குவித்தல்.

**குறிக்கோள் 6 - கால்நடைப் பிரிவு முழுவதும் தகவலறிந்த முடிவெடுத்தலை சாத்தியமாக்குவதற்காக, உடனுக்குடன் தரவுகளைச் சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் பகிர்வதை எளிதாக்கும் வகையில் ஒருங்கிணைந்த டிஜிட்டல் மயமாக்கப்பட்ட கால்நடை தரவு முகாமைத்துவ முறைமைகளை உருவாக்கி செயற்படுத்துதல்**

6.1. தகவல் தொழில்நுட்ப அடிப்படையிலான கால்நடைகள் தரவு முகாமைத்துவ முறைமையை தாபித்தல்.

**குறிக்கோள் 7 - வாழ்வாதார மேம்பாடு மற்றும் தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு ஆதரவளிக்கும் கால்நடைகளை உற்பத்திசெய்தல்**

7.1. வறுமை ஒழிப்பு மற்றும் பொருளாதார அபிவிருத்திற்கான வாழ்வாதார மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தை தயாரித்தல்.
7.2. பெண்கள் மற்றும் இளைஞர் மேம்பாட்டிற்கான அரசாங்க உதவி நிகழ்ச்சித்திட்டத்தை தயாரித்தல்.

**குறிக்கோள் 8 - உள்ளூர் மற்றும் சர்வதேச வர்த்தகத்தில் நுகர்வோர் நம்பிக்கை, தயாரிப்பு அங்கீகாரம் மற்றும் போட்டித்தன்மை என்பவற்றை மேம்படுத்துவதற்காக, கண்டறியும்**

**தன்மையுடன் கூடிய வலுவான தயாரிப்பு அடையாள உத்திகளை உருவாக்குதல் மற்றும் சந்தை அணுகலை மேம்படுத்துதல்.**

8.1. சந்தை போக்குகளை மதிப்பிட்டு வெளியிடுவதற்கு நிறுவனங்களுக்கு இடையேயான வழிமுறையை தாபித்தல்.

8.2. கால்நடை உற்பத்திகளின் பிராண்டிங்கிற்கான வழிமுறையை அறிமுகப்படுத்துதல்.

8.3. சந்தை அணுகலை பெறுவதற்காக, சிறு உற்பத்தியாளர்களை கமக்காரர் அமைப்புகள் மற்றும் கூட்டுறவு சங்கங்கள் ஆகியவற்றை அமைக்கும் வகையில் ஊக்குவித்தல்.

8.4. ஏற்றுமதி சந்தை வாய்ப்புகளுக்காக மூலோபாய வர்த்தக இணைப்புகளையும் இருதரப்பு ஒத்துழைப்புகளையும் ஏற்படுத்துதல்.

8.5. வரி சலுகைகள் மற்றும் பிரத்தியேக நிதி கருவிகளுக்கான அணுகலை எளிதாக்குதல்.

8.6. தயாரிப்பு கண்டறியும் முறைமையை அறிமுகப்படுத்துதல்.

**குறிக்கோள் 9 - சுழற்சி பொருளாதார அணுகுமுறையின் மூலம் கால்நடை உற்பத்திகள் பயன்பாட்டை மேம்படுத்துதல்**

9.1. கால்நடை துணை உற்பத்திகளின் பயன்பாட்டை ஊக்குவித்தல்.

9.2. புத்துயிர் பெற்ற புதிய தயாரிப்புகளுக்கான சந்தை அணுகலை உருவாக்குதல்.

9.3. துணை தயாரிப்புகளுக்கான தர உத்தரவாத முறைமையை அறிமுகப்படுத்துதல்.

**குறிக்கோள் 10 - நிலையான மற்றும் காலநிலை மாற்றங்களுக்கு ஈடுகொடுக்கக்கூடிய கால்நடை உற்பத்தியை உறுதிசெய்ய, பொது-தனியார் அக்கறையுடைய தரப்புகளுக்கும் மற்றும் நிறுவனங்களுக்கும் இடையேயான ஒத்துழைப்பின் மூலம் புதுமையான, சந்தை சார்ந்த ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியை ஊக்குவித்தல்**

10.1. கால்நடை ஆராய்ச்சியை வழிநடத்தவும் மற்றும் கண்காணிக்கவும் ஒரு தேசிய ஆலோசனை குழுவை தாபித்தல்.

10.2. கால்நடை ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு ஆகியவற்றுக்கு பொது-தனியார் நிறுவனங்களுக்கு இடையேயான ஒத்துழைப்புகளை வலுப்படுத்துதல்.

10.3. ஆராய்ச்சி முடிவுகளை அல்லது அதன் விளைவுகளை பயனர்கள்/நுகர்வோர் அல்லது முதலீட்டாளர்கள் ஆகியோருக்கு பரப்புவதற்கு ஒரு தேசிய தளத்தை தாபித்தல்.

10.4. நாட்டின் தேவையை பூர்த்திசெய்ய, பொருத்தமான தொழில்துறை சார்ந்த ஆராய்ச்சியை ஊக்குவித்தல்.

10.5. சர்வதேச ஒத்துழைப்புகளை மேம்படுத்துதல்.

10.6. ஆராய்ச்சி வெளியீடுகளை தொழில்மயமாக்க முதலீட்டை ஊக்குவித்தல்.

**குறிக்கோள் 11 - கால்நடை பிரிவின் மாறிவரும் தேசிய தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில், மனித மற்றும் உள்கட்டமைப்பு திறன்களை வலுப்படுத்துதல்**

11.1. கால்நடை உற்பத்திக்கான உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு, அரசாங்கம் மற்றும் வெளிநாட்டு நன்கொடையாளர்கள் ஆகிய தரப்புகளிடமிருந்து போதிய நிதி உதவியைப் பெற்றுக்கொள்ள வழிசெய்தல்.

11.2. கால்நடை பிரிவில் அனைத்து மட்டங்களிலும் தொழில்முறையையும் மற்றும் திறமையான பணியாளர்களையும் மேம்படுத்துதல்.

**குறிக்கோள் 12 - பாதுகாப்பான மற்றும் உயர்தரமான கால்நடை உற்பத்திகளின் தொடர்ச்சியான விநியோகத்தை பேணும் ஒரு நிர்வாக மற்றும் ஒழுங்குமுறை கட்டமைப்பை உறுதி செய்வதற்காக, நிறுவனங்களுக்கு இடையேயான ஒருங்கிணைப்பை மேம்படுத்துதல்**

12.1. உரிய துறைகளுக்கு இடையேயான கொள்கைகள் மற்றும் அமுலாக்கங்களை இற்றைப்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைத்தல்.

12.2. அரசின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கால்நடை வளர்ப்பை ஒரு முன்னுரிமை பிரிவாக உறுதிசெய்தல்.

12.3. தரமான மற்றும் பாதுகாப்பான கால்நடை உற்பத்தி மற்றும் பொருட்கள் என்பவற்றை உறுதிசெய்வதற்காக, தற்போதுள்ள ஒழுங்குமுறை கட்டமைப்பை மேம்படுத்துதல்.

12.4. அக்கறையுடைய தரப்பு ஈடுபாட்டையும் காலமுறை தாக்க மதிப்பீட்டையும் ஊக்குவித்தல்.

**கொள்கை நோக்கங்களுடன் ஒத்துப்போகும் வகையில் பத்து கொள்கை முன்னுரிமைகள் இனங்காணப்பட்டுள்ளன.**

1. சந்தை முறைமகள், பெறுமானச்சங்கிலிகள், பதப்படுத்துதல் மற்றும் சுழற்சிப் பொருளாதாரம்
2. மரபியல், இனப்பெருக்கம் மற்றும் மந்தைகளின் உற்பத்தித்திறன்
3. தீவனப் பாதுகாப்பு, புல் தீவனம், நிலம் மற்றும் ஊட்டச்சத்து
4. விலங்குகளின் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு
5. கால்நடை மற்றும் கோழி வளர்ப்பு டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் தரவு உட்கட்டமைப்பு
6. கால்நடை நிதி, காப்பீடு மற்றும் வங்கி கடன் பெறும் தகுதி
7. தொழில்முனைவோர் திறன், திறன் மேம்பாடு, விரிவாக்க சேவைகள் மற்றும் பிரத்தியேக வணிகமயமாக்கல்
8. நியமங்கள், உணவுப் பாதுகாப்பு மற்றும் சான்றளிப்பு

9. முதலீடு, அரச-தனியார் பங்களிப்புகள் (PPPs), ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்பு பங்காளித்துவங்கள்
10. துறைசார் செயல்திறன் முகாமை, கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு (M-E) மற்றும் மூலோபாய இலக்குகள்

**தூண் 1: சந்தை முறைமைகள், பெறுமானச்சங்கிலிகள், பதப்படுத்துதல் மற்றும் சுழற்சிப் பொருளாதாரம்**

பெறுமதி சேர்த்தல், குளிரூட்டப்பட்ட சங்கிலிமுறைமை, பதப்படுத்தும் உட்கட்டமைப்பு, சேமிப்பு, நவீனமயமாக்கப்பட்ட இறைச்சிக்கூடங்கள் மற்றும் கால்நடைத் துணை தயாரிப்புகளின் சுழற்சி முறைப்பயன்பாடு உள்ளிட்ட கால்நடை பெறுமானச்சங்கிலி நெடுகிலும் சந்தை முறைமைகளை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துதல். சந்தைப் பங்களிப்பு, உத்தியோகபூர்வ பதப்படுத்துதல், துணை தயாரிப்புகளின் பயன்பாடு மற்றும் தனியார் முதலீடு ஆகியவற்றை சாத்தியமாக்குவதற்காக சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் ஆகியவற்றின் மீளாய்வு இதில் உள்ளடக்கப்பட வேண்டும்.

**குறிக்கோள்கள் 1, 2, 3, 4, 5, 8, 9, மற்றும் 12.**

**தூண் 2: மரபியல், இனப்பெருக்கம் மற்றும் மந்தைகளின் உற்பத்தித்திறன்**

விரிவுபடுத்தப்பட்ட மற்றும் சிறந்த முறையில் ஒழுங்குபடுத்தப்பட்ட செயற்கை முறை விந்தூட்டல் (AI), மேம்படுத்தப்பட்ட இனப்பெருக்க சேவைகள், தேர்ந்தெடுக்கப்பட்ட காளைகள் மற்றும் கிடாரிகள் ஆகியவற்றின் மூலம் மரபணு மேம்பாடு மற்றும் மந்தைகளின் உற்பத்தித்திறன் ஆகியவற்றில் முன்னேற்றங்களை ஏற்படுத்துதல். தேசிய மந்தை திட்டமிடல், உள்நாட்டு இனப் பாதுகாப்பு மற்றும் இனப்பெருக்க தரவுக் முறைமைகள் ஆகியவற்றுக்கு ஆதரவளிக்கும் அதே வேளையில், கரு பரிமாற்றம் மற்றும் மரபணு தேர்வு தொழில்நுட்பங்கள் உள்ளிட்ட பிற இனப்பெருக்க தொழில்நுட்பங்களையும் பயன்படுத்துதல்.

**குறிக்கோள்கள் 1, 3, 4, 6 மற்றும் 11.**

**தூண் 3: தீவனப் பாதுகாப்பு, புல் தீவனம், நிலம் மற்றும் ஊட்டச்சத்து**

உள்நாட்டுப் புல் தீவனம் மற்றும் தீவன வளங்கள் என்பவற்றை விரிவுபடுத்துதல், தீவன உற்பத்திக்குத் தேவையான நிலங்களை விடுவித்தல், தீவனச் சேமிப்பு மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துதல், தீவன உருவாக்கம் மற்றும் தீவனத் தொழில்நுட்பங்களுக்கு ஆதரவளித்தல், தீவனப் பாதுகாப்புத் தரங்களை வலுப்படுத்துதல் மற்றும் இறக்குமதி செய்யப்படும் தீவனப் பொருட்களில் தங்கியிருப்பதைக் குறைத்தல் ஆகியவற்றின் மூலம்

தீவனப் பாதுகாப்பு, தரம், மலிவு விலை மற்றும் ஊட்டச்சத்து முகாமை ஆகியவற்றை மேம்படுத்துதல். குறிப்பாக பயன்படுத்தப்படாத நிலங்கள் உள்ள இடங்களில், உள்நாட்டுத் தீவன வளர்ப்பு மற்றும் விலங்கு தங்குமிடங்கள் ஆகிய இரண்டிற்குமான கால்நடைத் துறையின் நிலத் தேவைகளை மீளாய்வு செய்தல்.

**குறிக்கோள்கள் 1, 3, 5, 10, மற்றும் 12.**

**தூண் 4: விலங்குகளின் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு**

ஆரோக்கியமான தேசிய மந்தைகள் மற்றும் மந்தைகள் ஆகியவற்றைப் பேணுவதற்கும், நோய்களினால் ஏற்படும் இழப்புகளைக் குறைப்பதற்கும், பொதுச் சுகாதாரத்தைப் பாதுகாப்பதற்கும் மற்றும் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதிச் சந்தைகளுக்கான பாதுகாப்பான, உயர்தரக் கால்நடைத் தயாரிப்புகளை ஆதரிப்பதற்கும் இலங்கையின் விலங்கு சுகாதார முகாமைத்துவக் கட்டமைப்புகளை வலுப்படுத்துதல். இதில் மேம்படுத்தப்பட்ட நோய் கண்காணிப்பு, தடுப்பு மற்றும் கட்டுப்பாடு; வலுவான தேசிய மற்றும் பிராந்திய நோய் நிர்ணய ஆய்வகத் திறன்; உடனுக்குடனான நோய் அறிக்கை, கால்நடை மற்றும் கோழிப் பண்ணைகளுக்கான உயிரியல் பாதுகாப்பு, வழிகாட்டுதல்கள்; வலுப்படுத்தப்பட்ட தனிமைப்படுத்தல் மற்றும் எல்லைக் கட்டுப்பாடு; மற்றும் ஒருங்கிணைந்த ஆரோக்கிய அணுகுமுறையின் மூலம் கால்நடை பொதுச் சுகாதார சேவைகளைச் செயற்படுத்துதல் ஆகியவை உள்ளடங்கும். விலங்குகளின் உடல் மற்றும் உள நல்வாழ்வை உறுதி செய்வதற்கான சிறந்த கால்நடை வளர்ப்பு நடைமுறைகள் பின்பற்றப்படும்.

இந்தத் தூண் டிஜிட்டல் மயமாக்கல் நிகழ்ச்சி நிரலுடன் நெருக்கமாக இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

**குறிக்கோள்கள் 1, 2, 5, 6, 8, 11, மற்றும் 12.**

**தூண் 5: கால்நடை மற்றும் கோழி வளர்ப்பு டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் தரவு உட்கட்டமைப்பு**

- பெறுமானச்சங்கிலியை டிஜிட்டல்மயமாக்கல்.
- விலங்குகள், உரிமையாளர்கள், பண்ணைகள், சுகாதாரப் பதிவுகள், இனப்பெருக்கம், உற்பத்தித்திறன், நடமாட்டம், பால் சேகரிப்பு, இறைச்சிக் கூடத் தரவுகள், சான்றளிப்பு, சந்தைத் தகவல் மற்றும் கண்டறியும் தன்மை போன்றவற்றை இணைக்கும் முக்கிய உட்கட்டமைப்பு அடுக்காக விலங்கு அடையாளங்காணல் மற்றும் கண்டறியும் முறைமையை (AITS) உருவாக்குதல். பொதுவான அடையாளங்காணல் மற்றும் இயங்குதன்மை முறைமையைப் பகிர்ந்துகொள்ளும் அதே வேளையில், ஒவ்வொரு விலங்கினமும் அதன் உற்பத்தி முறைக்கு ஏற்ற தொகுதிக்கூறுகளைக் கொண்டிருக்க வேண்டும்.

- செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பத்தின் ஆதரவுடனான விரிவாக்கல் சேவையை உருவாக்குதல்.
  **குறிக்கோள்கள் 6 மற்றும் 1, 2, 4, 8, மற்றும் 12**

**தூண் 6: கால்நடை நிதி, காப்பீடு மற்றும் வங்கி கடன் பெறும் தகுதி**

விலங்குகள், பண்ணைகள் மற்றும் பெறுமானச்சங்கிலி சார்ந்த நிறுவனங்களை அதிக வங்கிக் கடன் தகுதி உடையவைகளாக மாற்றுவதற்கு கால்நடை தரவுகள், விலங்கு அடையாளங்காணல் மற்றும் கண்டறியும் கட்டமைப்பு (AITS) மற்றும் உற்பத்தித்திறன் பதிவுகளைப் பயன்படுத்துவதன் மூலம் குறைந்த செலவிலான கடன், காப்பீடு மற்றும் முதலீடுகளைப் பெற்றுக்கொள்ள வழிவகுத்தல். இதில் சிறு மற்றும் நடுத்தர நுகர்வோர் (SMEs) மற்றும் தொழில்முனைவோருக்கான சலுகைக் கடன்கள், காப்பீட்டுத் தயாரிப்புகள், தீவனம் மற்றும் உள்ளீடுகளுக்கான செயற்பாட்டு மூலதனம் மற்றும் வணிகப் பண்ணைகள், பதப்படுத்துதல் மற்றும் குளிரூட்டப்பட்ட சங்கிலி உள்கட்டமைப்புகளுக்கான பெரிய அளவிலான நிதியுதவிகள் ஆகியவை உள்ளடங்கும்.

**குறிக்கோள்கள் 1, 2, 5, 6, 7, 10, மற்றும் 12.**

**தூண் 7: தொழில்முனைவோர் திறன், திறன் மேம்பாடு, விரிவாக்கல் சேவைகள் மற்றும் பிரத்தியேக வணிகமயமாக்கல்**

நிபுணர்கள் மற்றும் தொழில்நுட்ப ஊழியர்கள் ஆகியோரின் திறன் மேம்பாடு, பயிற்சிகள், விரிவாக்கல் சேவைகள், வணிக மேம்பாட்டு ஆதரவு, நிதி சார்ந்த அறிவு, செயல்விளக்கப் பண்ணைகள், டிஜிட்டல் ஆலோசனை சேவைகள், சந்தை இணைப்புகள் மற்றும் நிலம், தீவனம் மற்றும் நிதிக்கான அணுகல் ஆகியவற்றின் மூலம் பெண்கள், இளைஞர்கள் மற்றும் சிறுவிவசாயிகள் அவர்களின் வாழ்வாதாரக் கால்நடை வளர்ப்பு செயற்பாடுகளிலிருந்து வணிக ரீதியாக இலாபகரமான கால்நடைத் தொழில்களை நோக்கி நகர்வதை ஊக்குவித்தல்.

**குறிக்கோள்கள் 1, 5, 6, 7, 10, மற்றும் 11.**

**தூண் 8: நியமங்கள், உணவுப் பாதுகாப்பு மற்றும் சான்றளிப்பு**

கால்நடை பெறுமானச்சங்கிலி நெடுகிலும் தேசிய மற்றும் சர்வதேச நியமங்கள், உணவுப் பாதுகாப்பு கட்டமைப்புகள், சான்றளிப்பு வழிமுறைகள் மற்றும் விலங்கு சுகாதாரப் பாதுகாப்புகளை நிறுவுதல் மற்றும் செயற்படுத்துதல். இதில் பால், இறைச்சி மற்றும் முட்டை என்பவற்றின் நியமங்கள், பெறுமதி சேர்க்கப்பட்ட தயாரிப்புகள் மற்றும் விலங்குத் துணை தயாரிப்புகள் ஆகியவை உள்ளடக்கப்பட வேண்டும். அத்துடன், குளிரூட்டும் மையங்களின் ஒழுங்குமுறை, தரப் பரிசோதனை, நுண்ணுயிர் எதிர்ப்புத் திறன் (AMR)/எஞ்சிய நச்சுப் பரிசோதனை, முட்டை சுகாதாரம், இறைச்சிக் கூடத் நியமங்கள், உயிரியல் பாதுகாப்பு, நோய் கண்காணிப்பு மற்றும் கண்டறியும் தன்மையின் அடிப்படையிலான சான்றளிப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

**குறிக்கோள்கள் 1, 2, 5, 8, மற்றும் 12.**

**தூண் 9: முதலீடு, அரச-தனியார் பங்களிப்புகள் (PPPs), ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்பு பங்காளித்துவங்கள்**

பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள், தொழில்நுட்ப நிறுவனங்கள், நன்கொடையாளர்கள், பலதரப்பு அபிவிருத்தி வங்கிகள் (MDBs) மற்றும் சர்வதேச நிபுணர்கள் முதலிய தரப்புகளுடனான தொடர்புகள் உட்பட, பொது முதலீடு, தனியார் முதலீடு, அரச-தனியார் பங்களிப்புகள் (PPPs) மற்றும் கண்டுபிடிப்பு பங்காளித்துவங்கள் ஆகியவற்றின் மூலம் முதலீட்டை அதிகரித்தல். அரச-தனியார் பங்களிப்புகள் (PPPs) என்பன மூலதனத்தைத் திரட்டுவதற்கு மட்டுமல்லாமல், பெறுமானச்சங்கிலி நெடுகிலும் தொழில்நுட்பம், ஆராய்ச்சி, சேவை வழங்கல் மாதிரிகள் மற்றும் முகாமை நிபுணத்துவம் ஆகியவற்றை அறிமுகப்படுத்துவதற்கும் பயன்படுத்தப்பட வேண்டும்.

**குறிக்கோள்கள் 1, 5, 10, 11, மற்றும் 12.**

**தூண் 10: துறைசார் செயல்திறன் முகாமை, கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு (M-E) மற்றும் மூலோபாய இலக்குகள்**

முன்னேற்றத்தைக் கண்காணிப்பதற்கும், தடைகளை அடையாளம் காண்பதற்கும் மற்றும் நிறுவனங்களுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்துழைப்பு ஆகியவற்றின் மூலம் திருத்தங்களை மேற்கொள்வதற்கும் ஏதுவாக மத்தியமயமாக்கப்பட்ட தரவுகள், டாஸ்போடுகள், கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு (M-E), சந்தை நுண்ணறிவு மற்றும் மூலோபாய இலக்குகள் ஆகியவற்றைக் கொண்ட ஒரு தேசிய துறைசார் செயல்திறன் முகாமைத்துவக் கட்டமைப்பை நிறுவுதல். இதில் உற்பத்தி இலக்குகள், மந்தை அளவு இலக்குகள், உற்பத்தித்திறன் குறிகாட்டிகள், தீவனச் சுட்டிகள், விலங்கு சுகாதாரச் சுட்டிகள், நிதிப் பயன்பாடு, சந்தை விலைகள், தர இணக்கம் மற்றும் முதலீட்டு வரவுகள் ஆகியவை உள்ளடக்கப்பட வேண்டும்.

**குறிக்கோள்கள் 1, 6, 10 மற்றும் 12.**

**குறிப்புகள்**

1. கால்நடைகள் வளர்ப்பு கொள்கை - 2006
2. வரைவு பால் உற்பத்தி கொள்கை - 2023
3. வரைவு கோழி வளர்ப்பு கொள்கை - 2024